# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

# ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி , ஈரோடு
## ஏழாம் வகுப்பு – தமிழ்
## இயல் –1
## குறுவினா விடை

**1.பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.**
அங்கவை,சங்கவை.

**2.'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' - எவ்வாறு?**
வறட்சி காலத்தில், பாரி மகளிரிடம் பாணர்கள் இரந்து நின்றனர். அவர்கள் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர்.

**3.'ஒன்றாகு முன்றிலோ இல்'' என்னும் பழமொழியின் பொருள் யாது?** ''ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை''

**4.உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?**
உழவர்கள் நாற்றுப் பறிக்கும்போது நண்டுகளைப் பிடித்தனர்.

**5.நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?**
மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து நெல்மணியைப் பிரிப்பர்.

**6.தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?**
பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி ஆகியவை தாமிரபரணி .

**7. கொற்கை முத்து பற்றிக் கூறுக.**
கொற்கைத் துறைமுகத்தில் முத்துக்குளித்தல் நடைபெற்றது.கொற்கை முத்து உலகப் புகழ் பெற்றது.

**8.இரட்டை நகரங்கள் யாவை?**
திருநெல்வேலியும் பாளையங்கோட்டையும் இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன.

**9.பாளையங்கோட்டை தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்று அழைக்கப்படுவதன் காரணம் யாது?**
அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் , பாளையங்கோட்டை தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்று அழைக்கப்படுகின்றது.

**10.உவமை,உவமேயம்,உவம உருபு விளக்குக.**
ஒப்பிட்டுக் கூறப்படும் பொருளை உவமை என்பர். உவமையால் விளக்கப்படும் பொருள் உவமேயம் என்பர். 'போல'என்பது உவம உருபு.

**11.உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**
உவமையும், உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி. அதுவே உவம உருபு மறைந்து வந்தால் அஃது எடுத்துக்காட்டு உவமை அணி.

# இயல் –2

**1.பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?** பூமி - அன்பு

**2.பொய்கைஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டினார்?**
பொய்கைஆழ்வார் தன் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் மாலை சூட்டினார்.

**3.அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?**
அறக்கதிர் விளைய **உண்மையை** எருவாக இடவேண்டும்.

**4. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச் சாரம் எதனைக் குறிப்பிடுகின்றது?**

நீக்கவேண்டிய களை என்று **வன்சொல்லை** அறநெறிச் சாரம் குறிப்பிடுகின்றது.

**5. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?**
பொருளீட்டுவதைவிடப் பெரிய செயல் அதைக் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

**6.பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?**
மற்றவர்களுக்கு வழங்கி மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டலுக்கான நோக்கமாகும்.

**7.உருவக அணியை விளக்குக.**

உவமை ,பொருள் வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.
**சான்று :''வையகம் தகழியாக வார்கடல் நெய்யாக''**

பூமி அகல் விளக்காகவும் , கடல் நெய்யாகவும் உருவகப்படுத்தப் பட்டுள்ளதால், உருவக அணி ஆயிற்று.

**8.உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| உருவக அணி | ஏகதேச உருவக அணி |
|---|---|
| இரு பொருள்களுக்கும் உருவகப்படுத்ததுதல். | இருபொருள்களுள் ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் வருவது. |

**9.ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?**
பொருள் , கருவி ,காலம் , செயலின் தன்மை , உரிய இடம் ஆகியவற்றை ஆராய்ந்து செயலைச் செய்ய வேண்டும்.

**10.ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?**
★தெளிந்த நீர் ★நிலம் ★மலை ★நிழல் உடைய காடு

**11.சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?**
மிக்க பசி , ஓயாத நோயும் , அழிவு செய்யும் பகை சேராமல் நல்லவகையில் நடைபெறுவதே நாடு ஆகும். பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம் தரும் நாடே சிறந்த நாடு.

## இயல் -3

**1) இந்த உலகம் யாருக்கு உரியது?**
அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே இந்த உலகம் உரியது.

**2)உலகம் நிலைதடுமாறக் காரணம் யாது?**
சாதிகளும் கருத்து வேறுபாடுகளும் உலகம் நிலைதடுமாறக் காரணம் ஆகும்.

**3)வாழ்க்கை மலர்ச் சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?**
வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற நல்ல உள்ளத்தோடு வாழ வேண்டும்.

**4.காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச்சொன்னது?**
காக்கைக்குக் கூட்டில் உள்ளது காக்கைக் குஞ்சு அல்ல , குயில் குஞ்சு தான் என்று ஒருநாள் தெரியவந்தது. எனவே, இனி நாம் சேர்ந்து வாழ முடியாது என்று கூறி குயில் குஞ்சைப் போகச் சொன்னது.

**5.குயில் குஞ்சு தன்னை எப்போது 'குயில்' என உணர்ந்தது?**
குயில் குஞ்சு "கூ" என்று கூவியது , அன்று தான் ஒரு 'குயில்' என உணர்ந்தது.

**6. காயிதேமில்லத் அவர்கள் பற்றி தந்தை பெரியார் கூறியது யாது?**
" இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்." என்று காயிதேமில்லத் குறித்துத் தந்தைப் பெரியார் கூறினார்.

**7.காயிதேமில்லத் அவர்கள் பற்றி அறிஞர் அண்ணா கூறியது யாது?**
"தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்"

**8. காயிதேமில்லத் - பெயர்க்காரணம் யாது?**
காயிதேமில்லத்தின் இயற்பெயர் முகமது இசுமாயில். ஆனால் மக்கள் அன்போடு காயிதேமில்லத் என்று அழைத்தனர். காயிதேமில்லத் என்பதன் பொருள் சமுதாய வழிகாட்டி. அப்பெயருக்கு ஏற்ப வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

## சிறுவினா - இயல் :1

**1.உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.**
சுறுசுறுப்பாக நாற்று நட்டனர். மடைவழியே நீர்பாய்ச்சினர். நெற்பயிர்கள் வரிசையாக வளர்ந்து செழித்தன. நெல்மணிகள் மனம் மயங்குமாறு விளைந்தன. நெல்தாள்களைக் கட்டுகளாகக் கட்டிக் களத்தில் சேர்த்தனர். கதிரடித்தனர். நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன.

**2.திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத் தொழில் குறித்து எழுதுக.**

தாமிரபரணி ஆற்றின் மூலம் உழவுத்தொழில் நடைபெறுகின்றது. குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும் பயன்பாட்டில் உள்ளன. இருபருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. சிறுதானியங்கள் , காய்கனிகள் , பருத்தி , பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

**3.திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.**
அகத்தியர் பொதிகை மலையில் வாழ்ந்தார் . நப்பசலையார் , நம்மாழ்வார் , பெரியாழ்வார் , குமரகுருபரர் ஆகியோர் திருநெல்வேலியில் பிறந்து தமிழுக்குச் செழுமை சேர்த்துள்ளனர்.

**3.திருநெல்வேலி நகர அமைப்புப் பற்றிக் கூறுக.**

**1. காவற்புரைத் தெரு :**
அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் இங்குச் சிறைவைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது.
**2.கூழைக்கடைத் தெரு :**
தானியங்கள் விற்கும் கடைத்தெரு ஆகும்.
**3.அக்கசாலைத் தெரு :**
முற்காலத்தில் பொன் நாணயங்களை உருவாக்குபவர் வாழ்ந்த இடம்.

### இயல் - 2

**1.பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.**

பூதத்தாழ்வார் அன்பை அகல்விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் , மனத்தைத் திரியாகவும் கொண்டு , ஞானவிளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினார்.

**2.இளம்வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?**

இன்சொல விளை நிலம், ஈகையை விதையாகக் கொண்டு விதைத்து,வன்சொல் களையை நீக்கி,வாய்மை எருவினை இட்டு,அன்பு நீரைப் பாய்ச்சினால், அறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும்.

**3.ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?**

ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் மட்டும் போதாது, உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைந்து, உதவிசெய்தவதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.

**2. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?**

ஊருணி, தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது, அதைத் தடுப்பார் யாருமில்லை. பழுத்த பயன்மரத்தின் கனிகளை அனைவரும் எடுத்து அனுபவிக்கலாம். மருந்துமரம் உதவி செய்தலில் தன்னை மறந்த நிலையிலான பயன்பாட்டு நிலை ஒன்றே காணப்பெறுகிறது. நோயுடையார் எல்லாரும் பயன்படுத்தலாம்.

# இயல் -3

**1.சாந்தம் பற்றி இயேசு காவியம் கூறுவன யாவை?**

சாந்தம் என்ற அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே இந்த உலகம் உரியது.

அவர்களே தலைவர்கள் என்ற உண்மையை இயேசுநாதர் கூறினார்.

**2. குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.**

காக்கைக்குக் கூட்டில் உள்ளது காக்கைக் குஞ்சு அல்ல , குயில் குஞ்சு என்று ஒருநாள் தெரியவந்தது. எனவே, காகம் குயில் குஞ்சைப் போகச் சொன்னது.'கா' என்று கத்த முயற்சித்தது , அதனால் முடியவில்லை. தானே இரை தேடத் தொடங்கியது.ஒரு நாள் குயில் குஞ்சு "கூ" என்று கூவியது , அன்று தான் ஒரு 'குயில்' என உணர்ந்தது.

**3.காயிதேமில்லத்தின் கல்விப்பணி குறித்து எழுதுக.**

காயிதேமில்லத் கல்வி நிறுவனங்களை உருவாக்க நினைத்தார்.

திருச்சியில் ஜமால் முகமது கல்லூரியை உருவாக்கினார். கேரளாவில் ஃபரூக் கல்லூரி உருவாக காரணமாக இருந்தார்.

**4. காயிதேமில்லத் மேற்கொண்ட அரசியல் பணிகள் யாவை?**

சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்.இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினர்.இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர். மக்களவை உறுப்பினர்.

**5.பொருளாகுபெயரையும் சினையாகுபெயரையும் வேறுபடுத்துக.**

| பொருளாகு பெயர் | சினையாகு பெயர் |
|---|---|
| ஒரு பொருளின் பெயர் சினை(உறுப்பு)க்கு ஆகிவருவது பொருளாகு பெயர். | சினையின் பெயர் பொருளுக்கு ஆகிவருவது சினையாகுபெயர். |
| சான்று : மல்லிகை சூடினாள் | சான்று : தலைக்கு ஒரு பழம் கொடு |

**6.இரட்டைக்கிளவி , அடுக்குத்தொடர் ஒப்பிடுக.**

| வ.எண் | அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|---|
| 1 | பிரித்தால் பொருள் தரும். | பிரித்தால் பொருள் தராது. |
| 2 | நான்கு முறை வரை அடுக்கி வரும். | இரண்டு முறை மட்டுமே வரும். |
| 3 | சொற்கள் தனியே நிற்கும். | சொற்கள் இணைந்தே நிற்கும். |
| 4 | விரைவு , வெகுளி ஆகிய பொருளில் வரும். | குறிப்புப் பொருளில் மட்டுமே வரும். |

# விரிவானம்

**1.டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த புலவர்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**திருநெல்வேலிக் கவிஞர்கள்**

1.கவிமணி ,பாரதியார் ஆகியோர் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுரம். அங்கே சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் இருந்தவர் கடிகைமுத்துப் புலவர், அவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

2.பிள்ளைப்பெருமாள் சீவைகுண்டத்துப் பெருமாளைப் பற்றிப் பாடியுள்ளார்.

3.கொற்கையில்சுமார் இரண்டாயிரம் வருடத்துக்கு முன்னிருந்த ஒரு பெருங்கவிஞர் முத்தொள்ளாயிர ஆசிரியர்.

4. திருஞான சம்பந்தர் குற்றாலத்திற்கு வந்தார். நுண் துளி தூங்கும் குற்றாலம் என்று பாடினார். திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றாலக் குறவஞ்சி பாடினார்.

**முடிவுரை**

போற்றுதலுக்குரிய நகர் திருநெல்வேலி என்பதை அறியமுடிகின்றது.

**2.'உண்மை ஒளி' படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை**

சீனாவில் வாழ்ந்து வந்த துறவிகள் ஜென் துறவிகள். அத்துறவிகளின் கதையே ஜென் கதைகள். அதில் ஒன்று 'உண்மை ஒளி.'

**உண்மை ஒளி**

ஜென் குருவிடம் சிலர் பாடக் கற்றுக் கொண்டு இருந்தனர். ஒரு நாள் உண்மை ஒளி எது ? என்ற வினாவினைக் கேட்டார். சீடர்கள் புற வெளிச்சம் பற்றியே பதில் அளித்தனர்.ஒரு மனிதரைக் காணும் போது என் உடன் பிறந்தவர் என்று எப்போது உணர்கிறீர்களோ , அப்போது தான் உண்மையான ஒளி உங்களுக்குள் ஏற்படுகிறது என்பது பொருள் என்றார் குரு.

**ஏமாற்றம்**

ஒரு நாள் குரு குதிரையில் சென்று கொண்டு இருந்தபோது சாலையோரத்தில் மயங்கிக் கிடந்தவன் மீது குரு இரக்கம் கொண்டு அவனை குதிரை மீது அமரச்செய்தார். குதிரையை ஏறிவுடன் வேகமாகச் சென்று விட்டான். அவன் திருடன் என்பதையும் , தான் ஏமாற்றப்பட்டதையும் அறிந்தார்.

**அறிவுரை**

குதிரை வாங்க குரு குதிரைச் சந்தைக்குச் சென்றார். அங்கு அந்தத் திருடன் குதிரையை விற்றுக் கொண்டிருந்தார். குரு, நான் ஏமாந்து போனது தெரிந்தால் உண்மையில் சாலையில் மயக்கம் அடைந்து யார் கிடந்தாலும் அவருக்கு யாரும் உதவ மாட்டார்கள் என்றார்.குருவின் பெருமையை நினைத்து தலைகுனிந்தான் திருடன்.

**முடிவுரை**

ஏமாறாதே! ஏமாற்றாதே! என்பதை இக்கதை மூலம் அறியமுடிகின்றது.

**3.'பயணம்' கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை**

உதவி செய்து மகிழ்ந்த ஒருவரின் கதை தான் 'பயணம்'.

**ஆசை**

அஞ்சலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் மிதிவண்டியின் மீது ஆசை வைத்துத் தனது மூன்றாவது மாதச் சம்பளத்தில் மிதி வண்டி ஒன்றை வாங்குகின்றார். மிதிவண்டியில் செல்லுவது தான் அவருக்குப் பொழுதுபோக்கு.

**பயணம்**

இரண்டு நாட்கள் மிதிவண்டி பயணத்தில் ஹாசனை அடைந்தார். பெரிய இறக்கத்தில் இறங்கும் போது மிதிவண்டியில் காற்று இறங்கிவிட்டது. காற்றடிக்கும் கருவியும் இல்லை. ஒரு குடிசை வீடு தெரிந்தது. அதில் ஒரு சிறுவனும் அவனது அம்மாவும் இருந்தனர். காலைப்பொழுது விடிந்ததும் பக்கத்து ஊரில் உள்ள சந்திரேகௌடா என்பவர் மிதிவண்டியைச் சரி செய்து தருகின்றார். சிறுவனுக்கு மிதிவண்டி ஓட்டக் கற்றுக்கொடுக்கிறார்.சிறுவனின் மிதிவண்டி ஆர்வத்தைக் கண்டு ஓட்டக் கொடுத்தார். மிதிவண்டி சிறுவன் ஓட்டிக்கொண்டு இருக்கும் போது ,அவனிடம் சொல்லாமல் பேருந்தில் ஏறி செல்கின்றார்.

**முடிவுரை**

ஆசைப்பட்டு வாங்கியதைத் தியாகம் செய்த அவரின் கருணை உள்ளம் பாராட்டுக்குரியது.

## பொதுக்கட்டுரை

**என்னைக் கவர்ந்த நூல்- சிலப்பதிகாரம்**

**முன்னுரை:**

என்னைக் கவர்ந்த நூல் சிலப்பதிகாரமே ஆகும். அதனைப் பற்றிக் காண்போம்.

**அமைப்பு:**

சிலப்பதிகாரம் மூன்று பெரும் பிரிவுகளையும், முப்பது சிறுபிரிவையும் கொண்டுள்ளது. இந்நூலை இளங்கோவடிகள் இயற்றியுள்ளார்.

**கதை:**

கோவலனும், கண்ணகியும் திருமணம் செய்து வாழ்கின்றனர்.அவளைப் பிரிந்து கோவலன் மாதவியுடன் வாழ்கின்றார். மீண்டும் கண்ணகியுடன் மதுரை செல்கின்றார். சிலம்பை விற்கச் சென்ற இடத்தில் கோவலன் கொல்லப்படுகின்றான்.கண்ணகி நீதியை நிலைநாட்டி மதுரையை எரித்து,வானுலகம் செல்கின்றாள்.

**கவர்ந்த காரணம்:**

பொதுமக்களைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டதாலும் என்னைக் கவர்நதது இந்நூல்.

**முடிவுரை:**

சிலப்பதிகாரம் படித்தேன், என்னைக் கவர்ந்தது. நீங்களும் படியுங்கள்!

ச.செல்வகுமார் (watermark)

### ஒற்றுமையே உயர்வு

**முன்னுரை**

ஒற்றுமையே வலிமை என்பது பழமொழி. ஒற்றுமையின் உயர்வு குறித்து இனி காண்போம்

**உயர்வு**

வீட்டில் ஒற்றுமையாக இருந்தால் குடும்பம் உயர்வடையும். அந்த ஊர் உயரும் , அந்த நகரமே உயரும். நம் நாடே உயரும். ஒற்றுமையாகச் செயல்பட்டதால் விடுதலையும் கிடைத்தது.

**விளைவு**

இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது மக்கள் ஒன்று கூடி மக்களைக் காப்பற்றினர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களையும் வழங்கி , பாதிக்கப்பட்டவர்களின் வாழ்விடங்களை மீண்டும் கட்டமைத்துக் கொடுத்தனர்.

**ஒருமை**

மும்மதக் கடவுள்களும் அன்பால் ஒன்றுபட்டு நிற்பதைப் பார்க்கும் போது நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

**முடிவுரை**

வேறுபாடு இன்றி மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். அப்பொழுது தான் நாட்டில் ஒற்றுமை ஏற்படும்.

## கடிதம் எழுதுக.

**உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

**23,கவிமணி நகர்,**
**ஈரோடு – 1,**
**நாள்:---------.**

**அன்புள்ள அத்தைக்கு,**

அண்ணன் மகன் எழுதும் கடிதம். அனைவரும் நலமாக இருக்கின்றோம். அதுபோல அங்கு அனைவரும் நலமா?அடுத்த மாதம் முதல் வாரம் முதல் எங்கள் ஊரில் திருவிழா நடைபெற இருக்கின்றது. ஒரு வாரம் இத்திருவிழா நடைபெறும். தாங்களும் மாமாவும் அவசியம் கலந்துகொள்ள வேண்டும். அன்புடன் முடிக்கின்றேன்.

**இப்படிக்கு,**
----------------

**உறைமேல் முகவரி**

**பெறுநர் :** த.இன்சுவை,
56,வைகை நகர்,திருச்சி -2.

## பொருத்துக.

1.நாற்று - நடுதல்

2.நீர் - பாய்ச்சுதல்

3.கதிர் - அறுத்தல்

4.களை - பறித்தல்

5.தண்பொருநை - தாமிரபரணி.

6.அக்கசாலை - பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம்

7.கொற்கை - முத்துக்குளித்தல்

8.திரிகூடமலை - குற்றாலம்.

9.அன்பு - தகளி

10.ஆர்வம் - நெய்

11.சிந்தை - இடுதிரி

12.ஞானம் - விளக்கு

13. விளைநிலம் - இன்சொல்

14. விதை - ஈகை

15. களை - வன்சொல்

16. உரம் - உண்மை

17.எளிது - அரிது.

18.ஈதல் - ஏற்றல்.

19.அந்நியர் - உறவினர்.

20.இரவலர் - புரவலர்.

21.சாந்தம் - அமைதி

22.மகத்துவம் - சிறப்பு

23.தாரணி - உலகம்

24.இரக்கம் - கருணை

**ஆக்கம்:**

ச.சேட்டு மதார்சா,
M.A,M,A.,M.PHIL,BEd,PGDTR,DIP.JOUR., DIP.FOLK, PGDIP.ANIMATION,TPT
ப.ஆ.தமிழ், ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உ.பள்ளி
ஈரோடு - 638001.
மின்னஞ்சல் :settumatharsha@gmail.com

ஈரோடு சேட் மதார்சா